## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2012

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கு மற்றும் அதற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்ட காசேடு காணப்படாமையினால் மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்குக் கிடைத்த மற்றும் செலுத்தப்பட்ட பணம் தொடர்பான தகவல்களைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறுவனவு மற்றும் கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 437,517,439 ஆக இருந்தது. இருந்த போதிலும் அந்த மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித எழுத்து மூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட கட்டளை இல. 9 (அ) இன் பிரகாரம் ஒவ்வொரு உதவித் தொகை செலுத்துபவர்கள், அரசாங்கத்தினால் நிதியத்திற்காகச் செலுத்தப்படுகின்ற சகல உதவிப் பணம் தொடர்பான விபரம் மற்றும் உதவிப் பணம்

செலுத்துகின்றவர்களின் மரணத்தின் போது அவர்களுக்குச் செலுத்த வேண்டிய உதவிப் பணத்தை உள்ளடக்கிய பதிவேடு என்பன பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான பதிவேடு எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தென் மற்றும் வடமேல் மாகாணங்களுக்குரிய செலவு அறிவித்தல்கள் அமைச்சிலிருந்து பெறப்பட்டிருக்காததுடன் தென் மாகாண சபையின் 10 மாதங்களுக்குரியதும் வடமத்திய மாகாண சபையின் 11 மாதங்களுக்குரியதுமான தள்ளுபடிப் பதிவேடு வலய அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படாமையினால் மீளாய்வாண்டின் பங்களிப்புப் பணத்தை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.2 விளக்கமளிக்கப்பட்டிராத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட செலவு அறிவித்தலின் பிரகாரம் இரண்டு மாகாண சபைகளிலிருந்து ரூபா 155,556 தொகை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தள்ளுபடி பதிவேட்டின் பிரகாரம் அவ்விரண்டு மாகாணங்களின் ஆசிரியர்களிடமிருந்து அறவிடப்பட்ட பங்களிப்புப் பணம் ரூபா 261,883 ஆனமையால் ரூபா 106,327 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04.1(அ) ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 119,639,248 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 95,550,961 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 24,088,287 ஆன அதாவது 25 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்தது.

மீளாய்வாண்டில் பங்களிப்புப் பணம் மீளச்செலுத்துதல் ரூபா 4,706,791 இனால் அதாவது 53 சதவீதத்தால் உயர்வடைந்திருந்திருந்த போதிலும் வட்டி வருமானம் ரூபா 35,712,103 இனால் அதாவது 69 சதவீதத்தினாலும் பங்களிப்புப் பணப் பெறுவனவு ரூபா 21,580,090 இனால் அதாவது 25 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்திருந்தமையும் மிகையின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்த அங்கத்தவர் பங்களிப்பு பணம் பெறுவனவு ரூபா 5.6 மில்லியன் முதல் ரூபா 11.2 மில்லியனுக்கு இடையிலான வீச்சில் நிலவுவதுடன் ஒவ்வொரு மாத பங்களிப்பு பணம் பெறுவனவுகளின் தளம்பல்கள் அவதானிக்கப்பட்டது. மாதாந்தம் பெறப்பட வேண்டிய பங்களிப்பு பணம் எவ்வளவு என்பதனை கணிப்பிடும் முறைமை நிதியத்திடம் காணப்படாமையினால் காசாகவும் மாற்றல் கட்டளைகளின் கீழும் பெறப்படும் பங்களிப்பு பணம் மாத்திரம் ஆண்டின் பங்களிப்புப் பணமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 51.9 மில்லியன் வட்டி வருமானம் நிதியத்திற்குக் கிடைத்திருந்த போதிலும் அப்பணத்திலிருந்து நிதியத்தின்

ஓய்வூதியங்களைச் செலுத்துவதற்காக எவ்வித பணமும் பயன்படுத்தப்படாமல் நிதியத்திற்குக் கிடைத்த பங்களிப்புப் பணத்தை மீளச்செலுத்துவதற்காக ரூபா 8.7 மில்லியன் செலவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 43.2 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. சகல ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை பொருத்தமான முறையில் திருத்தங்கள் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக் 2013 யூன் மாதத்தின் போது பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசலைகளின் ஆசிரியர்களுக்கும் அரசாங்கத்தின் ஓய்வூதியம் மற்றும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய உரித்தைப் பெறக்கூடியதாகையால் மீளவும் அரசாங்கத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய தேவை காண்பிக்கப்படாமையினால் கட்டளைகளை திருத்தம் செய்வதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை என ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் எனக்கு அறிவித்திருந்தார்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) தள்ளுபடிப் பதிவேடு பராமரிக்கப்படுதல்
(இ) முதலீடு